ஆ. திருவாளர்கள் என். வி. என். சோமு, து. புருஷோத்தமன் காவலில் வைக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை மத்திய சிறைச் சாலைக் கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி 30-8-1981 அன்று பிற்பகல் 1.10 மணிக்கு வரப் பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

"I Submit that Thiruvalargal N.V.N.Somu, M.L.A., Son of Thiru N. V.Natarajan, residing at No.11, Subramani Street, Madras-7 and Puru shothaman, M.L.A., Son of Doraiswami, No.7, Main Road, Zackriah Colony, Kodambakkam Madras 24 were admitted as Remand Prisoners in this Prison on 29.8.1981. They were remanded by the Additional Chief Metropolitan Magistrate, Egmore, Madras in X.Cr.No. 477/81 till 11-9-1981 under Sec.143 IPC 41 C,P. Act and 7 (1) (a) Dr. L.A,Act

2. Both of them are treated as Special Class Remand Prisoners.

5. கவன ஈர்ப்புகள்.

அ. மேட்டூர் அருகில் தொப்பையாற்றில் பரிசல் விபத்து

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, "மேட்டூர் அருகிலுள்ள தொப்பையாற்றில் 15-8-1981 அன்று பரிசல் கவிழ்ந்ததால் மூன்று பேர் இறந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

15-8-81 அன்று மாலை சுமார் 6 மணி அளவில் தர்மபுரி மாவட்டம் பெண்ணகரம் மருக்கம்பட்டி கிராமத்தை சேர்ந்த சாமியண்ணன் மற்றும் எட்டுபேரும் தாங்கள் மேற்கொண்ட மரக்கரி வியாபாரத்தை முடித்துக்கொண்டு சேலம் மாவட்டம் மேச்சேரியில் உள்ள மல்லிகுண்டம் பரிசல் துறையில் நல்லமணக் காடு செல்வதற்காக கொக்கராபள்ளம் என்ற இடத்தில் ஒரு பரிசலில் ஏறினர். நல்ல மணக்காட்டைச் சேர்ந்த நல்லப்பன் என்பவரது மகனாகிய கொண்டையன் (வயது 40) என்பவர் அவருக்குச் சொந்தமான இரண்டு பசுக்களையும் அப்பரிசலில் ஏற்றிக்கொண்டு அப்பரிசலை ஓட்டினார். தொப்பையாறு ஆற்றில் கொக்கராப்பள்ளம் என்னும் இடத்தில் சுமார் மாலை 6.15 மணிக்கு பசுக்களால் ஏற்படுத்தப்பட்ட தடுமாற்றம் காரணமாக அப்பரிசல் நிலை குலைந்து கவிழ்ந்துவிட்டது. பரிசலில் பயணம் செய்த 6 பேரும், மற்றும் பரிசலோட்டியும் இரண்டு பசுக்களும் தப்பிவிட்டனர். கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூவர் இவ்விபத்தில் இறந்து விட்டனர்:

1 குப்பன், வயது 30
தந்தை பெயர் திரு பொன்னப்ப கவுண்டர்

1 28—178—6

2 கந்தசாமி வயது 25
தந்தை பெயர் வெள்ளப்ப கவுண்டர்,

3 அர்ஜுனர் வயது 35
தந்தை பெயர் பொன்னப்ப கவுண்டர்.

2. பரிசலை ஓட்டிய திரு. கொண்டையன் கைது செய்யப்பட்டு மேச்சேரி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளார். பரிசலும் கைப்பற்றப்பட்டது. மேச்சேரி காவல் நிலயத்தில் குற்ற எண். 112/81-ல் இ. பி. கோ. 304 பிரிவின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு மேற் கொண்டு புலனாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்விபத்தில் இறந்த மூவருடைய குடும்பத்திற்கும் தல ரூபாய் 1,000 நிதியுதவி வழங்க சேலம் மாவட்ட ஆட்சியரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணம் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தர்மபுரி மாவட்ட ஆட்சியர் மூலம் கொடுக்கப்படும்.

[முற்பகல் 10-30]

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்க முன் வந்ததற்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நிதி உதவி அளிப்பதும் விபத்துக்கள் நடக்கக்காரணமாக இருந்தவர்கள் மீது வழக்குகள் தொடருவதும் வந்த பின் காக்கும் நடவடிக்கையாக இருக்கிறது. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் நோக்கமே இது அந்த இடத்திலே ஏற்பட்ட முதல் விபத்து அல்ல இது. மூன்றாவது விபத்தாக நடந்திருக்கிறது. தொடர்நிகழ்ச்சியாக நடந்திருக்கிறது. சேலம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட இருபது பரிசல் துறைகள் இருக்கின்றன. எனவே, இதுபோன்ற விபத்துக்களைத் தடுக்கவும் அல்லது குறைக்கவும் வாய்ப்புள்ள இடங்களில் விசைப்படகுகளை இயக்கவும், அல்லது பரிசல்கள் அனைத்திலும் உயிர்காக்கும் பெல்ட்டுகள் கட்டாயமாக வைக்கவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வருமுன்னர் காக்கவேண்டுமென்பதில் இவ்வரசு அதிக அக்கறை கொண்டுள்ளது, அதில் இயந்திரப் படகுகள் இயக்க இயலுமா என்பது தொழில் நுட்ப ரீதியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. விபத்துக்கள் நிகழ்கின்றபொழுது, தங்களைக் காப்பாற்றுகின்ற வகையில் 'லைஃப் பெல்ட்' வேண்டுமென்று கேட்டார்கள். அது பற்றி அரசு ஆராயும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. செ. செம்மலை: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்தப் பரிசல் துறைகள் ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டிலே இருந்துவருகிறது. அந்த உரிமங்களை ஊராட்சி ஒன்றியங்கள், தனியார்களுக்கு ஏலம் மூலம் விடுகின்றன. அந்தத்

தனியார்கள், வியாபார நோக்குடன், பணம் அதிகம் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்குடன், நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாமல் அல்லது நிபந்தனைகளை மீறி, ஆட்களோடு ஆடுமாடுகளை ஏற்றுவது, அதிகபாரம் ஏற்றுவது போன்ற செயல்களைச் செய்து வருகிறார்கள். எனவே இதுபோன்ற விபத்துக்களைத் தடுக்கின்ற நோக்கோடு, தனியார்களுக்கு உரிமங்களைக் கொடுப்பதைத் தடுத்து, ஊராட்சி ஒன்றியங்களே, ஆட்களை நியமித்து அந்தப் பரிசல்களை விட அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மனிதர்களை ஏற்றுவதோடு பசுமாடுகளையும் ஏற்றுவதால்தான் இந்த விபத்தே ஏற்பட்டிருக்கிறது. தனியார்கள் சரியாக நடத்தவில்லையென்பது இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்து. ஊராட்சி ஒன்றியமே நடத்தினால், அதன்மூலம் இந்த விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால், அதைப்பற்றி அரசு நிச்சயமாகக் கவனிக்கும்.

(ஆ) வடாற்காடு மாவட்டம், விண்ணமங்கலம் 'டான்சி' தோல் பதனிடும் தொழிற்சாலை மூடல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, எம். ஆறுமுகம், கே. ஆர். சுந்தரம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ந. குலசேகர பாண்டியன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, 'வாணியம்பாடி வட்டம் விண்ணமங்கலத்தில் உள்ள 'டான்சி' தோல் பதனிடும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர் பாதிப்பு குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இந்தியாவில் தோல் தொழில் வர்த்தகமானது கடந்த 18 மாதங்களில் இதுவரையில்லாத அளவிற்கு ஒரு தேக்க நிலையினை அடைந்துள்ளது. இந்த தேக்க நிலையின் காரணமாக தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் (டான்சி), விண்ணமங்கலத்திலுள்ள தோல் பதனிடும் நிலையமும் பாதிக்கப்பட்டுள்ளது. 1979-80ஆம்